பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

# விடுதலை

இதழ்: 17 செவ்வாய்க்கிழமை 24-10-1989

Jaffna Sri Lanka
RECEIVED
1989-10-24
Periodicals Division
Library

## அமைதிப்படை அதிகாரிகள் இரத்ததானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் நேற்றுமுன் தினம் இரத்ததானம் வழங்கினர்.

இந்திய அமைதிப்படையினரின் பத்து அதிகாரிகள் வாராவாரம் மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் நடைபெறும் இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்தனர்

இம் மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பு அதிகாரியான டாக்டர் குமாரு வேலுப்பிள்ளை அமைதிப்படையினரின் இரத்ததானம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், இத்தகைய இரத்ததானத்தினால் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஏழை நோயாளர்கள் பெரிதும் பயனடைவதாகத் தெரிவித்ததுடன், அமைதிப்படையினர் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்துப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

### நவம்பர் 7-ல் இரண்டாவது 'பட்ஜட்'

# அரிசி, மா, சீனி விலை உயரும்!

# 'பட்ஜட்டில்' மக்களுக்குப் பேரிடி!

(நமது கொழும்பு நிருபர்)

மத்திய அரசின் புதியவரிவிதிப்புகளால்சாதாரண மக்களின் நாளாந்த வாழ்க்கைச் செலவு வெகுவாக அதிகரிப்பதுடன் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் உயர்வதோடு, பஸ், ரயில தொலைபேசிக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அரசுடன் நெருங்கிய நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசாங்கத்தின் 1990ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் துண்டுவிழும் தொகை 4284 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதால் இத்தொகையைச் சரிக்கட்டுவதற்காக அரசு புதிய வரிவிதிப்புகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இதனால் மக்களின் நாளாந்த பாவனைக்குரிய அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரலாம் எனவும் நம்பப்படுகிறது.

இதேசமயம் சிகரெட், பீடி, மதுபானம் போன்றவற்றின் வரிகளும் அதிகரிக்கப்படலாம்.

இவ்விலையுயர்வுகளால் ஜனசக்தி திட்டத்தின் கீழ் உதவியைப் பெறவுள்ள சாதாரண மக்களுக்கு இது பேரிடியாக அமையவுள்ளது. சாமான்களின் விலையை மட்டும்

(4ம் பக்கம் பார்க்க)

## கப்பம் தர மறுத்த கடை உரிமையாளர் கொலை!

(அச்சுவேலி)

அச்சுவேலி 'சிவா ரேடர்ஸ்' கடை உரிமையாளர் இராமலிங்கம் துரைராசசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 7-30 மணியளவில் இவரதுவீட்டுக்கு வந்த ஆயுதபாணிகள் இருவர் இவரை அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது ஒரு லட்சரூபா பணம் கேட்டதாகவும், அவ்வளவு பணம் தன்னிடம் இல்லை என அவர் மறுத்ததை அடுத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்,

37 வயதான துரைராசசிங்கம் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார். இவரது சடலம் நேற்றுக்காலை யாழ். பெரியாஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டது.

## இன்று 'கொமன்வெல்த்' மகாநாடு முடிவடைகிறது

(கோலாலம்பூர்)

மலேசியா கோலாலம்பூரில் 36 தலைவர்களோடு 46 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட 'கொமன் வெல்த்' மாநாடு இன்றுடன் முடிவடைகிறது.

இம் மாநாட்டின் சுயநல நோக்கங்களோடு கூட்டுச் சேர்ந்துள்ள பணபலமுள்ள நாடுகளின் போக்குகள் பற்றியும் அவை உலக வர்த்தகத்தையும், செலாவணியையும் தம் வசம் வைத்துக்கொண்டு வறுமையில் வாடும் நாடுகளுக்கு ஆதரவு காட்டாது நடந்து கொள்ளும் போக்குகள் பற்றி காரசாரமாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

கடன் சுமை பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும் ஏழைநாடுகளுக்கு பொருளாதார அனுகூலங்களை ஏற்படுத்தும் முகமாக அயல்நாட்டுத்தனியார் மூலதனத்திலி

(4ம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடிக்கு 8 இராணுவம் பலி!

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம்பெற்றநிலக்கண்ணி வெடித்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

## போலிக் குற்றச்சாட்டின் மீது தொழிலாளர் கைது

(அட்டன்)

கொட்டகலையிலுள்ள பளிங்குமலைத் தேயிலைத் தொழிற்சாலையை எரிக்க முயன்றதாகக் கூறி, 25 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டகலையிலுள்ள ஏதென்ஸ் சைட் தோட்டத்திலுள்ள இளைஞர்களான 25 பேரை அட்டன் பொலிசார் தோட்டத்தினுள் புகுந்து கைதுசெய்தனர். இப்பகுதியி

(4ம் பக்கம் பார்க்க)

### ஒரு படிவம் நான்கு ரூபா முதல் அதிகம்

## விண்ணப்ப படிவ விற்பனை லாபகர தொழிலாகமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் விண்ணப்பப் படிவ விற்பனை தற்பொழுது லாபகரமானதோர் தொழிலாக மாறி வருகின்றது.

இங்குள்ள சில விற்பனை நிலையங்கள் சந்தர்ப்பத்தைப்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைகளுக்கு 4 அம்புலன்ஸ் வண்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திற்கு 4 புதிய அம்புலன்ஸ் வண்டிகள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அம்புலன்ஸ் வண்டிகளை இங்கு எடுத்துவருவதற்காக சாரதிகள் ஏற்கனவே கொழும்புக்குச் சென்றுள்ளனர். இவை யாழ். சுகாதார சேவைப் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தினாலும், இந்திய அரசாங்கத்தினாலும் சில புதிய அம்புலன்ஸ் வண்டிகள் இங்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### லங்கா சமசமாஜக் கட்சி அறிக்கை

## ஜனாதிபதியும் அரசும் ராஜினாமா செய்யவேண்டும்!

(கொழும்பு)

ஜனாதிபதியும் அவரது அரசும் உடனடியாக ராஜினாமாச் செய்து இடைக்கால அரசு ஒன்று நிறுவவேண்டும் என லங்கா சமசமாஜக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு முன்னதாக ஜனாதிபதியும் அரசும் ராஜினாச் செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தினமும் நிலைமை மோசமாகி வருவதால் ஜனநாயகம் அழிந்துபோகிறது. பொருளாதாரப் பிரச்சினையால் பொதுமக்கள் பெரும் துயரங்களை அனுபவிக்கின்றனர் எனவும் இதற்கு அரசு ராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் அதிபருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அதிபர் திரு. ரீ. ஈ. ஆனந்தராஜா வட-கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரைவட-கிழக்கு இணைப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிபராகப் பதவி வகித்து வந்தார்.

வட-கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபராக திரு. மகேஷ் செல்வரத்தினம் தற்பொழுது கடமையாற்றி வருகின்றார்.

### உணவுப் பொருள்களின்

## விலை மதிப்பிட புதிய அமைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப் படுத்துவதற்கு புதிய அமைப்பொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் ஆணையாளராக உணவுத்திணைக்கள ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவு, இறக்குமதி, விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அரச, தனியார் நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகளும் இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

உணவுப் பொருட்களின் கொள்வனவு விநியோகம் சம்பந்தப்பட்ட கடமைகளை இனிமேல் இந்த புதிய அமைப்பே மேற்பார்வை செய்யும்.

விவசாயத்திணைக்களம், நெல் சந்தைப்படுத்தும்சபை, கூட்டுறவுத் திணைக்களம், சம

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிப் படைத்தவர் அடங்கிக்கொள்கிறார்

# ஜே. ஆர். அரசியலிலிருந்து விலகிக் கொள்கிறார்; கட்சி அங்கத்துவத்தையும் துறக்கமுடிவு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆளும் கட்சியிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.

83 வயதான திரு. ஜெயவர்த்தன இக்கட்சியின் நிரந்தர உறுப்பினராவர். ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பொறுப்புக்களிலிருந்து விலகிக்கொள்ளப்போவதுடன், அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்தும் விலகப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளில் தாம் இனியும் ஈடுபடப்போவதில்லை எனவும், அவ்வாறான எண்ணம் தமக்கு இல்லை எனவும் திரு ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் மிகவும் இராச தந்திரமானவர் என வர்ணிக்கப்பட்ட திரு. ஜெயவர்த்தன, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியது முதல் பெருமளவில் மௌனம் சாதித்து வந்துள்ளார்.

கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த கத்தோலிக்கரான திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தேர்தலில் வெல்லுவதற்காக தம்மைப் பௌத்தராக்கிக் கொண்டவர். இவர் பங்குபற்றிய முதலாவது தேர்தலில் மத விரோதம் பிரசாரம் மூலமே தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரைத் தோற்கடித்தார்.

2வது சட்ட சபையில் 1943ல் பண்டாரநாயக்கா சிங்களமும், தமிழும் அரசகரும மொழியாகவேண்டும் எனப் பிரேரித்தபோது ஜெயவர்த்தன சிங்களம் மட்டும் அரச மொழியாக இருக்க வேண்டும் என்றார்.

இவரைப் பிரதிநிதித்துவப் படுத்திய களனித் தொகுதியில் நடைபெற்ற யு. என் பி. மாநாட்டில் சிங்களம் மாத்திரம் அரசகரும மொழி என்று பிரேரணை கொண்டுவந்தவர் ஜே. ஆர்.

1947ல் நிதியமைச்சராக இருந்த காலத்திலிருந்தே ஏகாதிபத்திய அமெரிக்க சார்புக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கத் தொடங்கினார். இதனால் 'இயங்கி டிக்கி' என்ற பெயரில அழைக்கப்பட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயாட்சியையும், தமிழ் அரசகரும மொழியாவதையும் ஏற்றுக்கொண்ட 'பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தத்தை' எதிர்த்து 1957ல் ஜெயவர்த்தன கண்டி–கொழும்பு பாதயாத்திரையை மேற்கொண்டார். 'இம்புள்கொட' என்ற இடத்தில் திரு. எஸ். டி பண்டாரநாயக்காவிடம் அடி வாங்கி பாதயாத்திரையை நிறுத்தியவர்.

1977ல் பிரதமரானதும், தமிழ்மக்களுக்கு எதிராக யுத்



தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம் என்ற கோஷத்தை முன்வைத்தவர்

1978ல் தமிழ் மக்களுக்கு உரிமைகள் எதையும் வழங்க மறுக்கும் அரசியல்சட்டத்தை உருவாக்கினார்.

தொடர்ந்த தமிழ் இளைஞர்களின் போராட்டங்களை முறியடிக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற மனித உரிமைப் பறிப்புச் சட்டங்கள் மூலம் பலவற்றைப் பாராளுமன்றத்தில் தனக்கிருந்த பெரும்பான்மையை கொண்டு நிறைவேற்றித் தமிழ் இளைஞர்களைக் கொலைசெய்யவும், தடுப்பு வதை முகாம்களில் அடைக்கவும் வழிசமைத்தார்

இவர் காலத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்கள்தான் அதிகம். இவைகளால் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் உண்டாகின. ஆயிரக் கணக்கில் தமிழர் கொல்லப்பட்டனர். கற்பழிப்பு கொள்ளை என்பன நடந்தன. தமிழ் வர்த்தகர்களின் பெரும் தொழில் நிறுவனங்கள் தீயிடப்பட்டன. தமிழருக்கு பொருளாதாரத்துறையில் பெரும் தாக்கம் ஏற்பட்டது

11 வருடம் பிரதமர், ஜனாதிபதி பதவிகளை வகித்த இவர் 'சுபடத்தனமான' அரசியல் சாணக்கியத்தால் பதவியிலிருந்து வீழ்ந்துவிடாதபோதிலும் இறுதிக்காலத்தில் இயலாமை' காரணமாக இந்திய அரசுடன் ஒப்பந்தம் செய்து இந்திய அமைதிப் படையை நாட்டுக்குள் வரவழைத்தார்.

திரு. பிரேமதாசாவுடன் கொள்கை ரீதியாக மனக் கசப்பு ஏற்பட்டபோதிலும் இறுதியில் ஜே. ஆரின் ஆதரவாளர்கள் யு என். பி. யில் சிறுபான்மையினராகி விட்டனர்.

அரசியலிருந்து முற்றாக ஓய்வுபெறப்போகிறேன் என அறிவித்துள்ள இறுதி நாட்களில் சில ஞானோதயங்கள் ஜே ஆருக்கு ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிகின்றது.

## நீதிபதி அனுமதிபெற்று கைது செய்யவும்

(சென்னை)

வழக்கறிஞர் ஒருவரைக் கைது செய்யுமுன்பு நீதிபதி ஒருவரிடம் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு தமிழ் நாடு, பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டாக அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

தமிழகத்தில் மூத்த வழக்கறிஞர் ஒருவர் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்டது தொடர்பாகவே இவ்வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

ஒரு வழக்கறிஞரைக் கைது செய்வதானால் நீதிபதி ஒருவரின் அனுமதி பெறவேண்டும் என்பதனை சட்டத்தில் சேர்க்க வேண்டும் என இவர்கள் அரசிடம் கோரியுள்ளனர்.

இதேவேளை, வழக்கறிஞரை கைது செய்து நீதிமன்று முன் நிறுத்தி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் கோரியுள்ளனர்

வழக்கறிஞரைக் கைது செய்த பொலிசார் தற்போது தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

தமிழக வழக்கறிஞர்கள் தற்போது நீதிமன்றுகளைப் பகிஸ்கரித்து வருகின்றனர்.

## ஆசிரியருக்கு கடிதம்

### நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஐயா,

யாழ். மாவட்டத்தில் பல வீதிகள் தொடர்ந்தும் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது.

சில வீதிகளை திருத்தியமைப்பதற்கு கல், மண் என்பன பறிக்கப்பட்டு பல மாதங்களாகிவிட்டபோதிலும் அவை இன்னும் திருத்தப்படவில்லை,

தற்பொழுது மழைகாலம் தொடங்கிவிட்டது. எனவே இனியாவது காலம் தாழ்த்தாமல் குறிப்பிட்ட வீதிகளில் திருத்தவேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையும். சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகளும் நடவடிக்கை எடுக்குமா?

புங்கன்குளம்
20. 10. 89

இ. ராஜகோபால்

## வீடமைப்பு அபிவிருத்திவங்கி

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக வீடமைப்பு அபிவிருத்தி வங்கியொன்று நிறுவப்பட இருக்கிறது'

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் அறிமுகப்படுத் தப்படவுள்ள இந்த வங்கி வீடுகளை அமைப்பதற்கும், வாங்குவதற்கும் கடன்வழங்கவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைக்கப்படவுள்ள இந்த வங்கியின் 273 கிளைகள் நாடெங்கும் அமைக்கப்படவுள்ளன

### யாழ் நகரில் போதைவஸ்து தடுத்து நிறுத்தவேண்டும்

ஐயா,

யாழ் நகரில் போதைவஸ்து விற்பனையும் பாவனையும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக குருநகர், சின்னக்கடை ஆகிய இடங்களில் இதற்கு அதிகமான இளைஞர்கள் அடிமையாகி யுள்ளனர்.

இதனைப்பாவித்த போதையில் இந்த இளைஞர்கள் வீடு வந்ததும் வீட்டில் அட்டகாசம் செய்கிறார்கள். பணமில்லா விட்டால் வீட்டில் உள்ள உயர்ந்த பொருட்களை திருடி விற்று போதைவஸ்தை வாங்குகின்றனர். இப்பாவனையில் இருந்து விடுபட முடியாமலும் இந்த இளைஞர்கள் தவிக்கின்றனர்.

மாகாண அரசு இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமா?

குருநகர். அ. சீலன்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
05. 01. 1930

●–●

உதிர்வு:
24. 10. 1987



சி. கறுப்பையா

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குலத்தின் மணிவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புச் செல்வமே
ஈராண்டு மறைந்தாலும்
உமது நினைவு எம்மைவிட்டு மறையவில்லை
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி: கமலாம்பிகை
பிள்ளைகள்: ரவி, ஜெயம்,
சாந்தி, ராஜன், உற்றார்,
உறவினர்.

70, கன்னாதிட்டி றோட்,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(022)

## ஊழியர்களின் சம்மதமின்றி சந்தாப்பணம் வெட்டு!

(கோண்டாவில்)

ஊழியர்களின் முன் அனுமதி பெறாமல் தொழிற்சங்கமொன்றின் பேரில் சம்பளத்திலிருந்து சந்தாப்பணம் கழிக்கப்பட்டுள்ளதால் அவ் ஊழியர்கள் அதிருப்தி அடைந்துள்ளனராம்.

இச்சம்பவம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் டிப்போவில் நடந்துள்ளது. இந்த டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதிகள், மெக்கானிக்குகள் ஆகியோரின் சம்பளத்திலிருந்து யு. என். பி தொழிற் சங்கத்துக்கென இவ்வூழியர்களின் முன் அனுமதி பெறாமலே சந்தாப்பணம் கழிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி டிப்போ ஊழியர்களின் தற்போதைய தொழிற்சங்கமும் பாதிக்கப்பட்ட ஊழியர்களும் மேலிடத்தில் விசாரித்த போது மேலிடம் உரிய மறுமொழியை இன்னமும் வழங்கவில்லை என்று தெரியவருகிறது.

ஊழியர்களிடம் 'கறந்த பணம்' யாருக்குப் போய்ச் சேர்ந்துள்ளது என்பது புதிராகவுள்ளதாம்.

### கனகரத்தினம் பொறுப்பேற்றார்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் பதவியை மீண்டும் திரு எஸ். கனகரத்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் சில மாதங்களாக தமது சொந்தத் தேவையின் பொருட்டு வெளியில் இருந்து வந்தார். அப்போது மேற்படி சபையின் பொது முகாமையாளரான திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைவர் பதவியை ஏற்று நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பறக்கும் தட்டு செய்தி உண்மையா?

(கொழும்பு)

இரத்தினபுரிப் பகுதியில் பறக்கும் தட்டின் நடமாட்டம் காணப்படுகின்றதா? இப்படியொரு சந்தேகம் அப்பகுதி வாசிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

சிலதினங்களுக்கு முன்னர் வானவில்லின் நிறங்கள் அடங்கிய பந்து ஒன்று மின்னல் வேகத்தில் பறந்து சென்றதை தாம் கண்டதாக அப்பகுதியைச் சேர்ந்த சிலர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேர்தல் களம்:

# மூன்று கட்சிகளுக்கு தேர்தல் சின்னங்கள் வழங்கப்பட்டன

(புதுடில்லி)

இந்திய தேர்தல் களத்தில் குதிக்கவுள்ள மூன்று அரசியல் கட்சிகளுக்குரிய தேர்தல் சின்னங்கள் பற்றி தேர்தல் கமிசன் அறிவித்துள்ளது.

ஜனத்தாதள், இந்துபாய் படடேல் தலைமையிலான ஜனதாக்கட்சி, லோக்தள் ஆகியவற்றுக்கான தேர்தல் சின்னங்களே அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஜனதாதள் கட்சிக்கு 'சக்கரம்' சின்னமும், இந்துபாய்ப்படேல் தலைமையிலான ஜனதாக் கட்சிக்கு ஒரு சக்கரத்திற்குள் உழவர் ஒருவர் மண்வாரியால் மண்ணைத் தோண்டுவது போன்ற சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

லோக்தள் கட்சிக்கு 'மாட்டு வண்டி' சின்னம் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் சின்னம் சம்பந்தமாக ஜனதா கட்சிகளுக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு காரணமாக ஏர் உழவர் சின்னம் தேர்தல் கமிசனால் இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச

## பாராளுமன்ற ஒன்றியத்தின் ஆயுட்கால உறுப்பினர்

(லண்டன்)

சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் உறுப்பினராக பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய சாவகச்சேரித் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந. நவரத்தினம் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் ஆயுட்கால உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஒன்றியத்தின் உறுப்பினராக இருந்து ஒன்றியத்திற்கு ஆற்றிய சேவைகளை கௌரவித்தே இவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.

ஆசியாவில் இருந்து இப்பாராளுமன்ற ஒன்றியத்தின் ஆயுட்கால உறுப்பினராக நியமனம் பெற்ற முதல் மனிதர் என்ற பெருமையை திரு. நவரத்தினம் பெற்றுள்ளார்.

## தென்னாபிரிக்காவுக்கு மேலும் பல தடைகள்!

(கோலாலம்பூர்)

தென் ஆபிரிக்கா மீது இப்போதுள்ள பொருளாதாரத் தடைகளை மட்டுமன்றி மேலும் பல தடைகளை புதிதாக விதிக்க வேண்டும். இவ்வாறு, கோலாலம்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. ஆனால் ஏனைய நாடுகள் யாவும் ஏற்றுக்கொண்டன.

தென் ஆபிரிக்காவுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் நிதி உதவி செய்யும்போது கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும். கடன் காலத்தை அதிகபட்சமாக 90 நாட்கள் என நிர்ணயிக்கவேண்டும் என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

தென்ஆபிரிக்கா இனவெறிக் கொள்கையுடைய ஆட்சியை நடத்துவது தெரிந்ததே.

## 'சட்ட ஆண்டு' ஐ.நா. சபையிடம் கோரிக்கை

(சிறப்பு நிருபர்)

1990-ம் ஆண்டை அனைத்துலகச் சட்ட ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்ய வேண்டும் எனக் கூட்டுச் சேரா இயக்கத்தின் அமைச்சர்கள் நிலைக் கூட்டம் ஐ நா. சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## "இடையூறு வந்தாலும் நியாயத்திற்கு குரல் கொடுப்பேன்"

--டி. ராஜேந்தர்

[சென்னை]

"ஏழைகளுக்காகவும், நியாயத்திற்காகவும் தொடர்ந்து என்குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்: அது ஓயாது" என்று திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குனருமான டி. ராஜேந்தர் கூறினார்.

சிறையில் இருந்து வந்த ராஜேந்தருக்கு பாராட்டு விழாக் கூட்டம் மயிலாப்பூர் மாங்கோட்டையில் நடந்தது. சென்னைமாவட்ட காங்கிரஸ் ஏற்பாடுசெய்திருந்த இக்கூட்டத்தில் டி. ராஜேந்தருக்கு முன்னாள் ஆளுநர் பா ராமச்சந்திரன் பொன்னாடை போர்த்தினார்.

"முன்பு கருணாநிதி சட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பழிவாங்கப்பட்டதை எதிர்த்து நான் கண்டன ஊர்வலம் நடத்தினேன். அன்று நடந்த கலவரத்திற்கு அன்றைய முதல்வர் என்னைக் கைதுசெய்யவில்லை. ஆனால் இன்று மக்களுக்காக அரிசி ஊர்வலம் சென்ற என்னைக் கருணாநிதி கைது செய்து சிறையில் அடைத்துள்ளார். எனக்கு ஜால்ரா அடிக்கத் தெரிந்திருந்தால் ராஜ்கோட்டில் அமர்ந்திருப்பேன்; கோவிந்தா பாடத் தெரிந்திருந்தால் கோபாலபுரம் சென்றிருப்பேன்; ஆமா போடத் தெரிந்திருந்தால் அறிவாலயம் சென்றிருப்பேன்; சரமாரியாகக் கேள்விகள் கேட்டதினால் மனம் நொந்து உங்கள் முன் நிற்கிறேன்."

இவ்வாறு டி. ராஜேந்தர் பேசினார்.

# வடக்கே வரும் ரயிலில் வசதியான பயணத்திற்கு வழிவகை செய்யப்படுமா?

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான சேவையிலீடுபடும் யாழ்தேவி ரயிலில் வசதி குறைந்த பெட்டிகள் இணைக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்தேவி ரயிலில் இணைக்கப்படும் பிரயாணிகள் பெட்டிகளில் உள்ள மின் விசிறிகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன.

அத்துடன் சில பெட்டிகளில் ஒழுங்கான குடிநீர்க் குழாய்களோ, மலசலகூட வசதிகளோ இல்லை எனவும்

(4ம் பக்கம் பார்க்க)

## கிராம சேவகர் இன்றி பலாலியில் மக்கள் அவதி

(பலாலி)

பலாலிக் கிராமசேவகரை சென்ற மாத முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய ஒரு குழுவினர் கடத்திச் சென்றமையைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் கிராமசேவகரின்மையால் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

இப்பகுதி மக்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகள், உணவு முத்திரை விண்ணப்பங்கள் என்பவற்றை மட்டுமல்லாமல், நாளாந்தம் அரசு தொடர்பான சேவைகளுக்கும் கூட கிராமசேவகரின் சிபார்சுகளைக்கூடப் பெறமுடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர்.

## 'தமிழ் நாதம்' கலைப்போட்டி

(ஒஸ்லோ)

நோர்வேயில் இயங்கிவரும் தமிழ்நாதம் வானொலி நிலையம் இவ்வாண்டு கலைப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

கவிதை, வானொலி நாடகம் ஆகிய துறைகளில்இப்போட்டி நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுநல அமைப்புத் தலைவர்கள் கம்பூச்சிய படைவிலகலை ஏற்றுக்கொள்ள மறுப்பு!

(கோலாம்பூர்)

கம்பூச்சியாவிலிருந்து சகல துருப்புக்களையும் திருப்பி அழைத்திருப்பதாக வியட்னாம் அறிவித்துள்ளதை பொதுநல அமைப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளன.

'இந்த படைவிலகல் நடவடிக்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் மேற்பார்வை செய்யப்படவில்லை இதனால் இதனை அப்படியே எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது' என பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுநல அமைப்பு நாடுகளின் உச்சி மகாநாடு தற்பொழுது மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றுவருகின்றது. இந்த மகாநாட்டில் பங்குபற்றும் சிங்கப்பூர், மலேசியா, புரூணை ஆகிய நாட்டுத் தலைவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## தி.மு.க. ஆட்சியைக் கலைக்க ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் உள்ள தி.மு.க. ஆட்சியை கலைத்து ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்து தமிழக மக்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னையில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசினார்.

தமிழக அரசின் செய்தித் துறைப்பிரிவு தி. மு. க. அரசின் சாதனைகளை படம் எடுத்தது. அதில் கழக அரசு, கலை அரசு, கலைஞர் அரசு, தி. மு. க. அரசு என்றே தெரிவிக்கப்படுகிறது எனவும் அவர் அங்கு கூறினார்.

இது கட்சிப் பிரச்னையே. இந்த ஆட்சி தமிழக மக்களின் நலனுக்காக இல்லை. கலைஞர் கருணாநிதியின் குடும்பத்திற்கும் தி மு. கவுக்கும் நடக்கும் ஆட்சியே எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கார் திருடனுக்கு விசித்திர தண்டனை!

(கலிபோர்னியா)

கலிபோர்னியா நீதிமன்றம் கார் திருட்டு வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு விசித்திர தண்டனையை வழங்கியுள்ளது.

குற்றம் நிருபணம் ஆனதும் நீதியரசர் திருடனை நோக்கி "ஒரு பொருள் எனக்கு உரிமையானதாக இல்லாதிருந்தால் அதை நான் தொடமாட்டேன்" என்ற வாக்கியத்தை [illegible] பத்தாயிரம் தடவை எழுதச் சொல்லிக் கட்டளையிட்டார்.

# 'சார்க்' உச்சிமாநாடு இவ்வாண்டு நடைபெறும்

(லண்டன்)

சார்க் நாடுகளின் உச்சி மகாநாடு திட்டமிட்டவாறு இவ்வாண்டு நடைபெறும் என சார்க் நாடுகளின் புதிய செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த மகாநாட்டைப் பின்போடுமாறு இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது. எனினும் அக்கோரிக்கை பற்றி தனக்கெதுவும் தெரியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த சார்க் நாடுகளின் உச்சி மகாநாடு பற்றிய மேலதிக விபரங்களை அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கவில்லை.


## பிறந்தநாள் வாழ்த்து



★ முஹம்மது முஃபீஸ் ★

(ராஜா)

யாழ் புதிய சோனகதெருவைச் சேர்ந்த சறாக் றிம்ஷியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மது முஃபீஸ் இன்று (24 10.89) செவ்வாய்க்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை வாப்பா, உம்மா, முஹம்மது சுல்த்தான் அப்பா, முஸ்தபா அப்பா, வாப்பிச்சிமார், அப்பாமார், உம்மும்மாமார், அப்பாமார், மாமாமார், மாமிமார், சாச்சாமார், சாச்சிமார்' மச்சான், மச்சிமார் மற்றும் சியாறு, முஜீப், நுஸ்ரா, சௌமி, அஸ்கி ஆகியோரும் உற்றார், உறவினர், அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சகல பாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

எம். எஸ். சறாங்
157, 4-ம் குறுக்கு, புதிய சோனகத்தெரு,
யாழ்ப்பாணம்.

(008]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விடுதலை

# நெசவுத்தொழிலாளருக்கு தொழிற் பாதிப்பு நிவாரணம்

வடக்குக் கிழக்கிலுள்ள ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் தொழில் பாதிப்புக்குள்ளாகி மீளவும் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடிசைக் கைத்தொழிலாகவும், சீவனோபாயத் தொழிலாகவும் நெசவுத் தொழிலை மேற்கொண்ட குடும்பங்கள் கலவர காலங்களின்போது தமது வசிப்பிடங்களை விட்டு அகதிகளாக இடம்பெயர்ந்து சென்றமையால் நெசவு நூலுக்குச் செய்த முதலீட்டையும், தறிக்குரிய உபகரணங்களையும் இழந்துவிட்டனர் இதனால் இத்தொழிலை மீளவும் ஆரம்பிக்க முடியாத நிலையில் மிகவும் கஷ்டமான வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களினால் தொழில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு, அவர்கள் மீளவும் தொழில் ஆரம்பிப்பதற்கான நிவாரணப் பணமாக ரூபா நாலாயிரம், பல்வேறு தொழில்களை மேற்கொண்டவர்களுக்கும் மாகாண அரசு வழங்கிய போதிலும் ஏழை நெசவுத்தொழிலாளர் மீது பாரபட்சம் காட்டப்படுவதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மாகாண அரசுக்கு இழுக்கை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் மீது மாகாண அரசு நடவடிக்கை எடுக்குமா?

நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும், இளைஞர்களும், யுவதிகளும் தமது பகுதி கிராமசேவகர்களிடமும் இவ்விடயம் குறித்து பல்வேறு விண்ணப்பங்களையும், முறையீடுகளையும் மேற்கொண்டபோதிலும், அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகிவிட்டன, கிராமசேவகர்கள் தொட்டு உதவி அரசாங்க அதிபர்கள் வரையான சகல உத்தியோகத்தர்களும் நிவாரணக் கொடுப்பனவுகள் விடயத்தில் பெரும் 'தர்பார்' நடாத்தியதாகவே பல்வேறு பகுதி மக்கள் மத்தியிலும் பேசப்பட்டு வருகின்றது இவர்களது போக்கால் நிவாரணப்பணம் கிடைக்கவேண்டிய பலர் கிடைக்காமல் அல்லலுறுவதும், தேவையற்ற பலர் வெகு சுலபமாக நிவாரணம் பெறுவதுமே இன்றைய நிகழ்வாகவுள்ளது.

யாழ் மாவட்டத்தின் பல கிராமங்களை எடுத்துப்பார்த்தால் நெசவுத் தொழில் குடும்பத் தொழிலாக இருப்பதையும், வேலையின்மையால் கஷ்டப்படும் இளைஞர்களினதும், யுவதிகளினதும் வருவாய்க்குரிய தொழிலாகவும் இத் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாகாண அரசும், அதன் அதிகாரிகளும் கவனத்தில் எடுக்கவேண்டும். இத்தொழிலை நம்பி வாழ்வை நடாத்திய இம் மக்களால் மீண்டும் முதலீடு செய்து இத்தொழிலை ஆரம்பிக்க முடியாதுள்ளது.

நெசவுத் தொழிலுக்குரிய நூலின் விலை நாளாந்தம் உயர்ந்து கொண்டு செல்கிறது. கைத்தொழிலுக்கான உபகரணங்களின் விலை உயர்ந்துள்ளது மட்டுமல்லாமல், அவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது இதனால் பெரும் தொகைப்பணத்தை மூலதனமாக முதலீடு செய்யக் கூடியதாக இத்தொழிலோடு சம்பந்தப்பட்ட குடும்பங்களின் பொருளாதார நிலை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

ஆகவே நெசவுத்தொழிலாளர்களிலும் கணிசமான தொகையினர் பாதிப்படைந்து மிகவும் கஷ்டநிலைமையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதைக் கவனத்தில் எடுத்து. பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளிலொன்றாக நெசவுத்தொழிலையும் அங்கீகரித்து, அவர்களுக்கும் மீளத்தொழிலை ஆரம்பிப்பதற்கான நிவாரணப்பணமாக நாலாயிரம் ரூபாவை வழங்க, மாகாணசபை உறுப்பினர்களும், மாகாண அரசும் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புனர்வாழ்வு, மீளக்குடியமர்த்தல், மீளத்தொழில் ஆரம்பித்தல் என்பவை மக்களோடு இயைந்ததாகவும், மக்களுக்குரியதாகவும் மாற்றப்படுதல்வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## நேரு கிண்ண கிரிக்கெட்

(புதுடில்லி)

தற்போது இந்தியாவில் நடைபெற்றுவரும் நேரு கிண்ண ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அடுத்தடுத்து இரு தோல்விகளைதழுவிய மேற்கிந்திய தீவுகள் அணி, நேற்று டில்லியில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 20 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 45 ஓவரில் 9 விக்கட் இழப்புக்கு 196 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளிக்குமுகமாகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களையே பெறமுடிந்தது. பம்பாயில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் அவுஸ்திரேலியா பாகிஸ்தானிடம் தோல்வி கண்டது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் நாடுகள் பெற்ற புள்ளிகள்:

| | கலந்து கொண்ட போட்டிகள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 1 | 4 |
| இலங்கை | 3 | 1 | 2 | 4 |
| அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 4 |
| பாகிஸ்தான் | 2 | 1 | 1 | 4 |
| இங்கிலாந்து | 3 | 3 | – | 12 |
| மே. இந்திய தீவுகள் | 3 | 1 | 2 | 4 |

எதிர்வரும் 25ந் திகதி இந்தியா எதிர் இங்கிலாந்து கான்பூரிலும், பாகிஸ்தான் எதிர் மே இந்திய தீவுகள் சண்டிகாரிலும், இலங்கை எதிர் அவுஸ்திரேலியா கோவாவிலும் நடைபெற உள்ளன. நேரு கிண்ணத்தை இங்கிலாந்து தட்டிச் செல்லும் வாய்ப்பே அதிகமாயுள்ளது.

# பெரியவிளான் கிராம சேவகர் பிரிவிற்கு மீளக்குடியமர்தல்நிவாரணம் கிடைக்குமா? மக்கள் தினமும் அலைகின்றனர்

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான் கிராம சேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கு இன்னமும் மீளக்குடியமர்த்தல் நிவாரணம் முதற்கட்டமான ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை எனபுகார் தெரிவிக்கின்றனர். தீபாவளிக்கு முன்னர் இது கிடைக்குமா எனவும் அங்கலாய்கின்றனர்.

இங்கு தற்போது பதில் கிராம சேவகர் ஒருவர் கடமை புரிகிறார். அவர் தமது பகுதியையும் இதனையும் பலத்த சிரமத்தின் மத்தியில் கவனிக்க வேண்டியுள்ளது.

முன்னர் இங்கு கடமையாற்றிய கிராம சேவகரிடம் இந்த நிவாரணத்துக்காக விண்ணப்பங்களைக் கொடுத்தவர்கள் பலருக்கு பணம் பெறுவதற்கான படிவங்கள் வழங்கப்படவில்லையாம் அதுபற்றிக் கேட்டபோது அவ்விண்ணப்பப்படிவங்கள் காணுமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நிரந்தர கிராம சேவகர் இன்றி பலர் விண்ணப்பிக்கவும் முடியவில்லை.

இதேநேரம் அடையாள அட்டை, நற்சாட்சிப்பத்திரம் உணவு முத்திரை, சமூக சேவை உதவிப்பணம் மற்றும் அவசிய தேவைகளுக்காக நிரந்தர கிராம சேவையாளர் இன்றி பொதுமக்கள் அலைந்து திரிகின்றனர்.

அண்மையில் அரசு பயிற்சி உத்தியோகத்தர்களையும், விசேட சேவை அலுவலர்களையும் கிராம சேவையாளர்களாக நியமித்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களில் நிரந்தர கிராம சேவையாளர் இன்றியே காணப்படுகின்றன.

## திங்கள் முதல் தினசரிநடைபெறும் இன்டர்சிட்டி ரயில்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான 'இண்டர் சிட்டி' விசேட கடுகதி ரயில் சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ரயில் தினமும் காலையில் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு நண்பகல் யாழ்ப்பாணத்தைச் சென்றடையும். யாழ்ப்பாணத்திலிருந்து நண்பகல் புறப்படும் 'இண்டர்சிட்டி' அன்று மாலை கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

இதற்குரிய ரயில்பெட்டிகள் மாளிகாவத்தையில் உள்ள புகையிரதப் பகுதியின் வேலைத்தளத்தில் தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டுவருகின்றன.

முன்னர் சிறிதுகாலம் நடைபெற்றுவந்த 'இண்டர்சிட்டி' ரயில்சேவை பின்னர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## சிறீமாவோவுக்கு கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கு கொலைப் பயமுறுத்தல் வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் சுதந்திரக் கட்சியை முற்றாக அழிக்கவும், இடதுசாரி பலத்தைக் குறைக்கவும் முயற்சி எடுக்கப்படுவதாகவும் பொலிசாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## அனுமதிப் பரீட்சை

(கொழும்பு)

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் கட்டிடச் சுற்றுடலில் பி. எஸ். ஸி. பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தகுதிகான பரீட்சை நவம்பர் மாதம் 4ந் திகதி நடைபெறவுள்ளது.

## உணவுப் பொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகளையும் இந்த அமைப்பு கண்காணிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியை பாதிக்காத வகையில் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றிற்கான உள்ளூர்விலைகளை நிர்ணயித்து பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி அவை கிடைக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி இக்குழுவினைப் பணித்துள்ளார்.

## போலிச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள பிறிதொரு தோட்டமான பளிங்குமலைத் தோட்டத் தொழிற்சாலையைத் தீமூட்டி எரிக்க முயன்றதாகக் கூறியே இத்தொழிலாளர்கள் அட்டன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதித் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலை தோன்றியுள்ளது.

ஏதுமறியாத அப்பாவி இளைஞர்கள் விடுதலைசெய்யப்படாவிடில் இப்பகுதித் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## ஒருபடிவம்

(1ம் பக்கதொடர்ச்சி)

பயன்படுத்தி இப்படிவங்களை அச்சிட்டு அதிக விலையில் விற்பனை செய்து கொள்ளை லாபமீட்டி வருகின்றன.

யாழ் நகரிலுள்ள சில புத்தகவிற்பனை நிலையங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தராப்பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் தற்பொழுது நான்கு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோன்றே வேறுபடிவ விற்பனைகளிலும் மக்களைச் சுரண்டி விற்பதில் சில விற்பனைநிலையங்கள் ஈடுபட்டுவருகின்றன.

க. பொ. த, (சாதாரண) பரீட்சை விண்ணப்பம் நீக்கப்பட்டதாகஅறிவிக்கப்பட்டதால் பழைய படிவங்களை போட்டஸ்ரற் பிரதி செய்து விற்கப்படுகின்றன.

## வடக்கே வரும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

தென்பகுதியில் சில பகுதிகளில் சேவையிலீடுபடும் ரயில்களில் புதிய மற்றும் சீர் செய்யப்பட்ட வசதியான பிரயாணிகள் பெட்டிகள் இணைக்கப்படும் அதே வேளை வடபகுதி ரயிலுக்கு மட்டும் மறுசீரமைக்கப்பட வேண்டிய பயணிகள் பெட்டிகள் இணைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

இதேபோன்றே பழமை வாய்ந்த என்ஜின்களே யாழ்தேவி ரயிலில் இணைக்கப்படுவதாகவும் இவை இடைவழியில் அடிக்கடி கோளாறு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## ஏறாவூரில் கொலை

(மட்டக்களப்பு)

முஸ்லிகள் வாழும் பகுதியான ஏறாவூர் முதலாம் குறிச்சியில் வீடொன்றினுள் புகுந்த ஆயுதபாணிகள், குடும்பத் தலைவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அவரது மனைவியையும் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர். இதற்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

## அரிசி மா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உயர்த்தி விட்டு, ஜனசக் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். தொகையை உயர்த்தாவிடில் கொடுக்கும் பெறுமதிக்குக் குறைந்த மதிப்புடைய பொருட்களையே பாவனையாளர்கள் பெற வேண்டிஏற்படலாம்.

எதிர்வரும் நவம்பர் 7ம் திகதி சமர்ப்பிக்கப் படவுள்ள 'பட்ஜட்' கடந்த காலங்களை விட அதிர்ச்சி தரக்கூடிய பல புதிய வரிவிதிப்புத் தொடர்பான அறிவிப்புகளுடன் சமர்ப்பிக்கப் படலாமெனவும் விசயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து நிதியம் ஒன்று அமைக்கப்படுவதை எல்லாத்தலைவர்களும் ஆதரித்தனர்.

போதை மருந்து தடுப்பது பற்றிய சர்வதேச கோட்பாடுகளில் கையொப்பமிட்டு ஊர்ஜிதப்படுத்த அனைத்து நாடுகளும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

தென்னாபிரிக்க அரசு மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்பது பற்றி ஆராயப்பட்டது. இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கும்வரை ஓயக்கூடாதென அமைப்பின் முன்னாள் செயலாளர் ஸ்ரீதத் ராம்பால் குறிப்பிட்டிருந்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும் என இங்கிலாந்து தவிர்ந்த ஏனைய நாடுகள் குரல்கொடுத்திருந்தன என்பது தெரிந்ததே

இம்மாநாட்டில் 17 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் சேர்ந்துகொண்ட பாகிஸ்தானுக்கு பலத்த உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது. இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கலந்துகொள்ளாதது பெருத்த ஏமாற்றம் அளித்திருந்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 24-10-1989ல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org